முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திரு.R.நரசிம்ம மூர்த்தி, எல்.எல்.பி.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் திங்கள்கிழமை

**இடைநிலை மனு எண்.1516/2015**
IN
**அசல் வழக்கு எண்.163/2015**

ரெங்கசாமி ... மனுதாரர்/ 3 ம்பிரதிவாதி

**/எதிர்/**

1. மாரியம்மாள்
2. காளிராஜ்
3. அருணாச்சலம்
4. ராஜேஸ்வரி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்/ 1, 2 பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியான விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 13.02.2025 தேதியன்று வந்தபோது, மனுதாரர்/3 ம்பிரதிவாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் மற்றும் திரு.எம்.சிவராமகிருஷ்ணன் ஆகியோர் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினராக இருந்துவரும் நிலையிலும், 4 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி இம்மனுவில் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை VII, விதி 11-ன் படி, எதிர்மனுதாரர்/வாதி தாக்கல்

செய்துள்ள அசல் வழக்கை நிராகரித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் /3ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u> :–

i. 1, 2 எதிர்மனுதாரர்கள் நிர்வழக்கினை இந்த மனுதார் மற்றும் 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். 1, 2 எதிர்மனுதாரர்கள் பிராது தபசில் கண்ட சொத்து உள்ளிட்ட பிற சொத்துக்கள் 1, 2 எதிர்மனுதாரர்கள் மற்றும் 3ம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட பொதுக்குடும்ப சொத்து என்றும், 3ம் எதிர்மனுதாரர், 1, 2 எதிர்மனுதாரர்களை பராமரிக்காமல் ஊதாரித்தனமாக செலவு செய்து கொண்டு தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வந்தார் என்றும், பூபதி என்ற பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்து வருவதாகவும், 3ம் எதிர்மனுதாரர், 1, 2 எதிர்மனுதாரர்களை பராமரிக்காமல் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வந்ததால் கூட்டுக் குடும்ப சொத்துக்களை சேர்ந்து அனுபவிக்க லாயக்கில்லாததால் ஏற்கனவே சொத்துக்களை பெரியோர்கள் முன்னிலையில் 1995–ம் வருடம் வாய்மொழியாக பாகம் செய்து கொண்டதாகவும், தாவா சொத்தும் வேறும் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு அனுபவம் செய்து வருவதாகவும் பொய்யாக கூறி நிர்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

ii. மேலும் வாய்மொழி பாகத்தை உறுதி செய்யும் விதமாக 26.07.1998ல் சாட்சிகள் முன்னிலையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரரும் குடும்ப ஏற்பாடு ஆவணம் ஒன்றை சாட்சிகள் மற்றும் நோட்டரி பப்ளிக் முன்புக்கு எழுதிக் கொண்டார்கள் என்றும், வாய்மொழி பாகத்திற்கு பின்பு 1, 2 எதிர்மனுதாரர்கள் பாகத்திற்கு கிடைத்த பிராது சொத்து உள்ளிட்ட பிற சொத்துக்களை வரி செலுத்தியும், கட்டிடத்தை வாடகைக்கு விட்டும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், வாய்மொழி பாகத்திற்கு பின்பு 3ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையோ, அனுபவமோ தாவா சொத்தில் இல்லை என பொய்யாக கூறி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 3ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரரிடம் கடன் பெற்றதால் 4ம் எதிர்மனுதரார், 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக கடனை வசூல் செய்ய வேண்டி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் O.S.No.26/2001 வழக்கில் 28.03.2022 தேதியில் பிறந்த தீர்ப்பின்படி 4ம் எதிர்மனுதாரருக்கு 3ம் எதிர்மனுதாரரிடமிருந்து வரவேண்டிய தொகையை திருப்பி செலுத்தாததால் 4ம் எதிர்மனுதாரர், 3ம் எதிர்மனுதாரருக்கு

பாத்தியப்பட்ட பிராது சொத்தை E.P.No.13/2004 in O.S.No.26/2001–ன்படி ஏல நடவடிக்கைக்கு உட்படுத்தியதால் அதன்படி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் 14.11.2011ம் தேதியில் நடந்த ஏலத்தில் இதன் தபசில் கண்ட சொத்தினை இந்த மனுதார் Rs.50,100/–க்கு ஏலம் எடுத்து தேதியில் ஏலம் உறுதி செய்யப்பட்டு E.A.No.246/2012 in E.P.13/2004 in O.S.No.26/2001 மனுவின்படி 15.03.2013ம் தேதியில் இதன் தபசில் சொத்தினை மேற்படி சார்பு நீதிமன்றத்திலிருந்து இந்த மனுதாரருக்கு வாழ்விப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் பிராது தபசில் சொத்திற்கும், மனுதாரர் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு மனுதாரரால் தனித்து அனுபவம் செய்து வரப்படுகிறது.

iii. ஆனால் இந்த 1, 2 எதிர்மனுதாரர்கள் குடியிருந்து வருவதாக கூறியுள்ள விலாசத்தில் 3ம் எதிர்மனுதாரர் குடியிருந்து வந்ததால் அந்த விலாசம் குறிப்பிட்டே O.S.No.26/01 வழக்கும், E.P.No.13/2004 In O.S.No.26/2001 நிறைவேற்றுதல் மனுவும் 4ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரருக்கு மேற்படி வழக்கின் பிராது மற்றும் நிறைவேற்றுதல் மனுவும் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் இருந்து சார்பு செய்யப்பட்டு மேற்படி 1, 2 எதிர்மனுதாரர்கள் குடியிருந்து வருவதாக கூறும் விலாசத்தில் மேற்படி நீதிமன்றம் மூலம் அழைப்பாணை ஒட்டப்பட்டும் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது.

iv. அதேபோல் இந்த 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு O.S.No.26/2001 மற்றும் இ.பி.எண்.13/2004–ன்படி 4ம் எதிர்மனுதார் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இதன் தபசில் கண்ட சொத்தின் ஏல நடவடிக்கைக்கு உட்படுத்தி ஏலம் எடுத்துள்ளார் என்பதை 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள நிர்வழக்கின் பிராதில் 5வது பாராவில் "1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியிடம் ஏதோ கடன் பெற்றதாக கூறி 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி மீது O.S.No.26/2001 என்ற ஒரு வழக்கை சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து ரூ.47,580/–க்கு ஒரு தீர்ப்பினை பெற்றுக் கொண்டு 1ம் பிரதிவாதி மீது தீர்ப்பாணை தொகையுடன் வட்டி தொகையும் சேர்த்து ரூ.54,425/–ஐ வசூல் செய்யக்கோரி இ.பி.எண்.13/2004 என்ற ஒரு நிறைவேற்றுதல் மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் வாதிகளுக்கு வாய்மொழி பாகத்தில் ஒதுக்கப்பட்ட தாவா சொத்து உள்ளிட்ட 5 லக்க சொத்துக்களில் ஏதோ 1ம் பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது போல அந்த சொத்தை நீதிமன்ற ஏலத்தில் விற்க நிறைவேறுதல்

மனு பரிகாரம் கோரி இருந்தார். அந்த சொத்துக்கள் 14.11.2011 ல் அந்த நீதிமன்ற ஏலத்தில் தாவா சொத்தானது ரூ.50,100/–க்கு 3ம் பிரதிவாதிக்கு ஏலம் விடப்பட்டது" என 4ம் எதிர்மனுதாரர், 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக O.S.No.26/2001 வழக்கினை தாக்கல் செய்துள்ளதும் E.P.No.13/2004–ன் மூலம் தாவா சொத்தை ஏலத்திற்கு 4ம் எதிர்மனுதாரர் கொண்டு வந்துள்ளார் என்பதினையும், அதேபோல் இதன் தபசில் கண்ட சொத்துக்களையும் 14.11.2011 ல் ஏலம் விடப்பட்டது என்பதினையும், கடந்த 2004ம் ஆண்டிலேயே இந்த 4ம் எதிர்மனுதார் தாவா சொத்தினை ஏலத்திற்கு கொண்டு வந்த விபரம் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு தெரியும் என ஒப்புக் கொண்டு நிர்வழக்கினை தாக்கல் செய்துள்ள நிலையில் O.S.No.26/2001 வழக்கிலும், E.P.No.13/2004 In O.S.No.26/2001 மனுவில் தாவா சொத்தின் உரிமை குறித்து எவ்வித மனுவும், வழக்கும் தாக்கல் செய்யாமல் இந்த மனுதாரர் வசம் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் மூலம் பிராது தபசில் சொத்தை ஒப்படைப்பு பெற்று இந்த மனுதார் தபசில் சொத்தினை அனுபவம் செய்து வரும் நிலையில் காலபிற்பாடாக அதாவது 11 வருடங்களுக்கு பின் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற E.P.No.13/2004 In O.S.No.26/2001 வழக்கில் 14.11.2011 தேதியில் நடைபெற்ற ஏலத்தை சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும், E.P.No.13/2004 ல் 23.01.2012ம் தேதியில் இந்த எதிர்மனுதாரருக்கு வழங்கிய ஏலச்சான்றிதழ் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என கோரி நிர்வழக்கினை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சட்டப்படி 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித வழக்கு மூலம் கிடையாது. அதேபோல் நிர்வழக்கினை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய 1, 2 எதிர்மனுதாரர்கள் காலவரை சட்டத்தின் படியும் தடை செய்யப்பட்டுள்ளார்கள்.

v. அதனால் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் O.S.No.26/2001 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பினை அனுசரித்து E.P.No.13/2004 In O.S.No.26/2001 நிறைவேற்றுதல் மனுவின்படி 14.11.2011 தேதியில் தாவா சொத்தினை பொருத்து நடந்து முடிந்த ஏலத்தினையும் 23.01.2012 அன்று வழங்கிய ஏலச்சான்றினையும் செல்லக்கூடியதல்ல என சமூகம் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய 1, 2 எதிர்மனுதாரர்கள் எவ்வித வழக்கு மூலம் இல்லை என்பதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அசல் பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

3. **1, 2 <u>எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u> :–**

i. மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி, 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். 2ம் எதிர்மனுதார்/2ம் வாதி, 3ம் எதிர்மனுதாருக்கும் 1ம் எதிர்மனுதார்/1ம் வாதிக்கும் பிறந்த மகன் ஆவார். பிராது தபசில் சொத்து 2ம் எதிர்மனுதார்/2ம் வாதி மற்றும் 3ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி அடங்கிய இந்துக் கூட்டுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் ஆகும். 3ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி திருமணத்திற்கு பின்னர் 2ம் எதிர்மனுதார்/2ம் வாதி பிறந்தவுடன் ஊதாரித்தனமாக செலவு செய்துகொண்டு 1,2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளை பராமரிக்காமல் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வந்தார். அவ்விதமே தற்போதும் வாழ்ந்தும் வருகிறார். அவர் கீழதிருவேங்கடத்தைச் சேர்ந்த பூபதி என்ற பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறார். 3ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளை பராமரிக்காமலும் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வந்ததாலும் கூட்டுக் குடும்ப சொத்துக்களை ஜாயிண்டாக அனுபவிக்க லாயக்கில்லாமல் இருந்ததால் ஏற்கனவே சொத்துக்களை குடும்ப பெரியோர்கள் முன்னிலையில் 1995ம் ஆண்டு வாக்கில் வாய்மொழியாக பாகம் செய்து கொண்டார்கள். அந்த வாய்மொழி பாகத்தில் தாவா சொத்து உள்ளிட்ட ஐந்து இலக்க சொத்துக்கள் 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பாகத்திற்கு என்றும் 9 இலக்க சொத்துக்கள் 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பாகத்திற்கென்றும் ஒதுக்கப்பட்டு அவரவர் பாகத்தினை அவரவர் அனுபவித்து வருகிறார்கள்.

ii. 3ம் எதிர்மனுதாரர் தன்னுடைய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளாததால் ஏற்கனவே செய்து கொண்ட வாய்மொழி பாகத்தை உறுதி செய்யும் விதமாக 26.07.1998ல் சாட்சிகள் முன்னிலையில் 1, 2 எதிர்மனுதார்களும் 3ம் எதிர்மனுதாரும் குடும்ப ஏற்பாட்டு ஆவணம் ஒன்றை சாட்சிகள் மற்றும் நோட்டரி பப்ளிக் முன்புக்கு எழுதிக்கொண்டார்கள். வாய்மொழி பாகத்தின்படி 1, 2 எதிர்மனுதாரர்களின் பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களை 1, 2 எதிர்மனுதாரர்கள் வரி முதலியன செலுத்தி ஆண்டனுபவம் செய்து வருகிறார்கள். தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தை 1, 2 எதிர்மனுதாரர்களே வாடகைக்கு விட்டும் அனுபவம் செய்து வந்தார்கள். வாய்மொழி பாகத்திற்கு முன்னர் தாவா சொத்தில் 3ம் எதிர்மனுதாருக்கு எவ்வித

உரிமையோ, அனுபவமோ இல்லை. 3ம் எதிர்மனுதார் 4ம் எதிர்மனுதாரிடமோ ஏதோ கடன் பெற்றதாக கூறி 4ம் எதிர்மனுதார் 3ம் எதிர்மனுதார் மீது O.S.No.26/2001 என்ற வழக்கை சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து ரூ.47,580/–க்கு ஒரு தீர்ப்பாணை பெற்றுக்கொண்டு 3ம் எதிர்மனுதார் மீது தீர்ப்பாணை தொகையுடன் வட்டித் தொகையும் சேர்த்து ரூ.54,425/–ஐ வசூல் செய்யக்கோரி E.P.No.13/2004 என்ற ஒரு நிறைவேற்றுதல் மனுவை தாக்கல் செய்தார். அந்த மனுவில் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு வாய்மொழி பாகத்தில் ஒதுக்கப்பட்ட தாவா சொத்து உள்ளிட்ட 5 இலக்க சொத்துக்களையும் ஏதோ 1ம் எதிர்மனுதாரருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதுபோல அந்த சொத்தை நீதிமன்ற ஏலத்தில் விற்க நிறைவேறுதல் மனுவில் பரிகாரம் கோரியிருந்தார். அந்த சொத்துக்கள் 14.11.2011 அன்று நீதிமன்ற ஏலத்தில் தாவா சொத்தானது ரூ.50,100/–க்கு மேற்படி மனுதார்/3ம் பிரதிவாதிக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. தாவா சொத்து உள்ளிட்ட 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை ஏலத்தில் கொண்டுவர 4ம் எதிர்மனுதாரருக்கோ அல்லது ஏலத்தில் எடுக்க மேற்படி மனுதார்/3ம் பிரதிவாதிக்கோ எவ்வித உரிமையும் இல்லை. அத்தகைய ஏலம் எதுவும் 1, 2 எதிர்மனுதாரர்கள்/ வாதிகளை கட்டுப்படுத்தாது. 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் நன்மைக்காகவோ, குடும்ப செலவிற்காகவோ 3ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி கடன் எதுவும் வாங்கியிருக்கவில்லை. 2ம் எதிர்மனுதார்/2ம் வாதியை மேற்கொண்டு படிக்க வைக்காததலிருந்தும் அவருக்கு தொழில் எதுவும் ஏற்பாடு செய்யாததலிருந்தும் அவருக்கு திருணம் கூட செய்து வைக்காத நிலையிலும் 3ம் எதிர்மனுதார் 1, 2 எதிர்மனுதாரர்களின் குடும்ப நன்மைகளுக்காக கடன் எதுவும் வாங்கவில்லை என்பது தெளிவாகும். ஒரு வாதத்திற்காக தாவா சொத்தில் 3ம் எதிர்மனுதாரருக்கு பங்கு உண்டு என்று வைத்துக்கொண்டாலும் தாவா சொத்து 3ம் எதிர்மனுதாரின் சுயசம்பாத்திய சொத்து இல்லாதது என்பதாலும் அது 2ம் எதிர்மனுதார் மற்றும் 3ம் எதிர்மனுதாரின் பூர்வீக சொத்தாக இருந்தாலும் நீதமன்ற ஏலம் 1, 2 எதிர்மனுதாரர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியது இல்லை. தாவா சொத்துக்கள் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை 4ம் எதிர்மனுதார் நீதிமன்றத்தை ஏமாற்றி மோசடி செய்து அதை மேற்படி மனுதார்/3ம் பிரதிவாதி தெரிந்து கொண்டே நீதிமன்றத்தில் தாவா சொத்தை ஏலம் எடுத்திருக்கிறார்.

iii. ஒரு வாதத்திற்காக தாவா சொத்து கூட்டுக் குடும்ப சொத்து என்று வைத்துக் கொண்டாலும் 2ம் எதிர்மனுதார்/2ம் வாதியின் பங்கை 4ம் எதிர்மனுதார்/2ம் பிரதிவாதி மற்றும் மனுதார்/3ம் பிரதிவாதி ஆகியோர்கள் மறைத்து மோசடியாக ஏலம் எடுத்துள்ளார்கள். தாவா சொத்தில் 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு பங்கு இருந்தால் அவர் 1ம் எதிர்மனுதார்/1ம் வாதிக்கு கணவர் என்ற முறையில் ஜீவனாம்சம் கொடுத்து பராமரிக்க வேண்டிய பொறுப்பு இருப்பதால் மேற்படி மனுதார்/3ம் பிரதிவாதி பெற்ற ஏலமானது 3ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதியின் ஜீவனாம்ச உரிமைக்கு கட்டுப்பட்டதாகும்.

iv. மேற்படி மனுதார்/3ம் பிரதிவாதி தாவா சொத்தை வெறும் ரூ.50,100/-க்கு ஏலம் எடுத்துள்ளார். தாவா சொத்து திருவேங்கடம் பேரூராட்சியின் மையப் பகுதியில் இருப்பதாலும் தாவா சொத்துக்கு அருகிலேயே மெயின் பஜார் நூலகம், காவல் நிலையம், பேருந்து நிலையம், பேரூராட்சி அலுவலகம், கால்நடை மருத்துவமனை, பள்ளிகள், வங்கிகள், அரசு அலுவலகங்கள் பல இருந்திருக்கிறது. ஏலமிட்ட தேதியில் கூட தாவா சொத்து மதிப்பு முப்பது லட்சத்திற்கும் குறையாமல் இருக்கும். ஆனால் தாவா சொத்தில் உண்மையான சந்தை மதிப்பை 4ம் எதிர்மனுதார்/2ம் பிரதிவாதி மறைத்து மோசடியாக அதை மேற்படி மனுதார்/3ம் பிரதிவாதியும் ஏலம் எடுத்துள்ளார். உரிமையியல் நடைமுறை சட்டம் ஆர்டர் 21 ரூல் 64-ன் படி ஒரு சொத்தின் மதிப்பு அதிகமாக இருக்கும்போது அந்த சொத்தில் ஒரு பகுதியை ஏலத்தில்விட்டால் கூட அது தீர்ப்பாணை தொகையை திருப்பதிப்படுத்தக்கூடியதாக இருக்கும்போது முழுச் சொத்தையும் நீதிமன்றம் ஏலத்திற்கு விடமுடியாது. நீதிமன்ற அமீனா நிர்ணயிக்கும் சொத்தின் சந்தை மதிப்பு இறுதியானது அல்ல. நீதிமன்றமோ அல்லது அமீனாவோ சொத்தின் மதிப்பை தீர்மானிக்கும்போது தகுதி வாய்ந்த கட்டிடப் பொறியாளர்களின் உதவியை பெற்றிருக்கவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்தின் வழிகாட்டுதல் மதிப்பை கூட அது சந்தை மதிப்பாக கருதப்பட முடியாது என்ற போதிலும் சொத்தின் மதிப்பை தீர்மானிக்கும் போது நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை. சொத்தின் சந்தை மதிப்பை விட குறைவான தொகைக்கு சொத்து முழுவதையும் ஏலத்தில் விடுவது ஆர்டர் 21 ரூல் 64-ன் படி செல்லக்கூடியதில்லை. அத்தகைய ஏலம் சட்டப்படி செல்லாது. அது 1, 2 எதிர்மனுதார்கள்/வாதிகளை கட்டுப்படுத்தாது. 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

அந்த ஏலத்தை Ignore செய்ய முடியும் என்ற போதிலும் நீதிமன்றத்திலிருந்து முறையான பரிகாரம் பெற வேண்டும் என்பதற்காக மேற்படி 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி நம்பர் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

v. ஒரு வாதத்திற்காக தாவா சொத்து 2ம் எதிர்மனுதார்/2ம் வாதி என்றும் 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் கூட்டுக் குடும்ப சொத்து என்று வைத்துக்கொண்டாலும் மேற்படி மனுதார்/3ம் பிரதிவாதி சொத்தை ஏலத்தில் எடுத்திருந்தால் அதில் 3ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதியின் பாகத்தை மட்டும் கேட்டு பாகப்பிரிவினை பரிகாரம் கோர முடியுமே ஒழிய மேற்படி மனுதார் 3ம் பிரதிவாதி நேரடியாக சொத்தை ஒப்படைப்பு பெற இயலாது. அவ்விதம் ஒப்படைப்பு பெறுவதும் சட்ட விரோதமாகும். மேற்படி மனுதார் 3ம் பிரதிவாதி அவ்விதம் ஒப்படைப்பு (Actual Delivery) எதுவும் பெறவில்லை. தாவா சொத்தை 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கூட்டுறவு பண்டக சாலைக்கு வாடகைக்கு விட்டிருந்தனர். நீதிமன்ற அமீனா மேற்படி மனுதார்/3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை ஒப்படைப்பு செய்து கொடுக்க செய்ய சென்றுள்ளதாக கூறப்படும் செயலானது சட்ட விரோதமாகும். மேற்படி மனுதார்/3ம் பிரதிவாதியால் கோரப்படும் ஒப்படைப்பு நேரத்தில் திருவேங்கடம் கூட்டுறவு பண்டகசாலை 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளிடம் சட்டப் பூர்வமான வாடகைதாரராக இருந்தது. வாடகைதாரர் சொத்து இருக்கும்போது அமீனா Actual Delivery கொடுத்ததாக பதிவு செய்திருப்பது ஆர்டர் 21 ரூல் 36க்கும் மற்றும் கட்டிடங்கள் குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாட்டு சட்டம் பிரிவு 10(1) க்கு விரோதமானதாகும். ஆகவே மேற்படி மனுதாரர்/3ம் பிரதிவாதியால் சொல்லப்படும் ஒப்படைப்பும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல. அது 1, 2 எதிர்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது. தற்போதும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள். 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு கடந்த 2004ம் ஆண்டிலிருந்தே பிராது சொத்தின் ஏல நடவடிக்கை குறித்து தெரிந்தும் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் மேற்படி E.P.No.21/2004 in O.S.No.26/2001 வழக்குகள் மற்றும் மனுவில் பிராது சொத்தின் உரிமை குறித்து எவ்வித மனுவும் தாக்கல் செய்யாமல் கால பிற்பாடாக எவ்வித வழக்கு மூலமும் இல்லாமல் வாதிகள் வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யாகும். நீதிமன்றம் 3ம் பிரதிவாதிக்கு ஏல சான்றிதழ் கொடுத்து 3ம் பிரதிவாதி சட்ட விரோதமாக தாவா சொத்தை ஒப்படைப்பு பெற்ற பின்னர்தான் தெரியும்.

நீதிமன்றத்தை ஏமாற்றி சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்தாலோ அல்லது சொத்தின் மதிப்பை விட குறைவான தொகைக்கு சொத்தை ஏலத்திற்கு விட்டாலோ நீதிமன்றத்தை ஏமாற்றி பெற்ற எந்த உத்தரவும் அது உச்சநீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவாக இருந்தாலும் இதை ரத்து செய்ய சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம். எனவே மேற்படி ஏலமும் ஏலச்சான்றிதழும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்று பரிகாரம் கேட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதார் 3ம் பிரதிவாதி ஆர்டர் 7 ரூல் 11–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் எந்த வழக்கு மூலமும் இல்லை. எனவே, மனுதார் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், அசல் வழக்கின் பிராதை நிராகரிக்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? என்பதேயாகும்.

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **தீர்வு** :–

i. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அசல் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவானது அசல் பிராதை ரத்து செய்யக்கோரி அசல் வழக்கில் கண்ட 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், பிராது தபசில் சொத்து இம்மனுவில் கண்ட 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், 3ம் எதிர்மனுதாரர், 4ம் எதிர்மனுதாரரிடம் வாங்கிய கடன் தொகையை வசூல் செய்யும்பொருட்டு 4ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் O.S.No.26/2001 வழக்கை தாக்கல் செய்து அவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு தொகையை வசூல் செய்யும்பொருட்டு 4ம் எதிர்மனுதாரர், 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக பிராது தபசில் சொத்தை நீதிமன்ற மூலம் விற்பனை

செய்து தீர்ப்புத் தொகையை வசூல் செய்திட இ.பி.எண்.13/2004 க்கு நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி நிறைவேற்றுதல் மனுவில் இம்மனுதாரர் தபசில் சொத்தினை 14.11.2011 ம் தேதியில் ஏலம் எடுத்து அதன் பின்னர் தபசில் சொத்தின் சுவாதீனம் கோரி இ.ஏ.நம்பர்.246/2012 ன் கீழ் மனு தாக்கல் செய்து அம்மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி கடந்த 15.03.2013 தேதியில் மனுதாரருக்கு தபசில் சொத்தின் சுவாதீனம் கொடுக்கப்பட்டது என்றும், மேற்சொன்ன வழக்கு விவரங்களும், நிறைவேற்று மனு விவரங்களும், 3 ம் எதிர்மனுதாரரின் மனைவி மற்றும் மகனான இம்மனுவில் கண்ட 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி விவரங்களை வாதிகள் தங்களுடைய பிராதிலே ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், ஆனால், 3 ம் எதிர்மனுதாரருக்கும், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கும் இடையில் 1992 ம் ஆண்டு வாய்மொழி பாகம் ஏற்பட்டதாகவும், அதில் தபசில் சொத்து 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதாக பொய்யான சங்கதிகளை கூறி வாதிகள் மேற்படி அசல் பிராதை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்சொன்ன நிறைவேற்றுதல் மனு நடவடிக்கைகள் கடந்த 14.11.2011 ம் தேதியில் முடிவுற்ற நிலையிலும், கடந்த 15.03.2013 ம் தேதியில் பிராது தபசில் சொத்தின் சுவாதீனம் மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும், மேற்சொன்ன 14.11.2011 தேதியிட்ட ஏலம் மற்றும் 23.01.2012 தேதியில் வழங்கப்பட்ட ஏலச்சான்று ஆகியவை செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கோரி வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த பிராது காலவரையறை சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிகளுக்கு எவ்வித வழக்கு மூலமும் இல்லை என்றும், அசல் பிராது எவ்வித வழக்கு மூலத்தையும் எடுத்துரைக்கவில்லை என்றும், எனவே, அசல் பிராதை ரத்து செய்து உத்தரவிடவேண்டும் என்றும் வாதிட்டார்.

iii. 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், வாதிகள் தங்களுடைய பிராதில் வழக்குச் சொத்து தங்களுக்கு வாய்மொழி பாகம் மூலம் கிடைக்கப்பெற்றது என தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள் என்றும், வாதிகள் மேற்படி அசல் வழக்கினை மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற இ.பி.எண்.13/2004 இன்

ஓ.எஸ்.நம்பர்.24/2001 நீதிமன்ற ஏல நடவடிக்கையையும், சுவாதீனம் உத்தரவையும் செல்லாது என விளம்புகை செய்யக்கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், பிராது தபசில் சொத்து 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு வாய்மொழி பாகம் மூலம் கிடைக்கப்பெற்றதா என்பதை சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் மட்டுமே தீர்மானிக்க இயலும் என்றும், வாதிகள் தங்களுடைய பிராதில் இவ்வழக்கிற்கான வழக்கு மூலத்தை தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள் என்றும், பிராதை ரத்து செய்வதற்கு பிராதில் வாதிகள் எடுத்துரைத்துள்ள சங்கதிகளை மட்டுமே கருத்தில் கொள்ளவேண்டும் என்றும், பிரதிவாதிகளின் ஆட்சேபனையின் அடிப்படையில் பிராதை ரத்து செய்ய இயலாது என்றும், இம்மனுவில் மனுதாரர்/3ம் பிரதிவாதி முன்வைத்துள்ள ஆட்சேபனைகள் சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் மட்டுமே தீர்வு காண இயலும் என்றும், ஆகையால் அசல் பிராதை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

iv. இருதரப்பு வாதங்களும், வழக்கு ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டது. 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி அசல் வழக்கினை மாண்புமிகு சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற இ.பி.நம்பர்.13/2004 இன் ஓ.எஸ்.26/2001 14.11.2011 தேதியில் நடைபெற்ற ஏலம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என விளம்புகை செய்யக்கோரியும், மேற்சொன்ன இ.பி.நம்பர்.13/2004–ல் 23.01.2012 தேதியில் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் 3ம் பிரதிவாதி/இம்மனுதாரருக்கு கொடுத்த ஏலச்சான்று சட்டப்படி செல்லக்கூடியதில்லை என விளம்புகை செய்யக்கோரியும் தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் அசல் பிராதில் கோரியுள்ள மேற்சொன்ன பரிகாரங்கள் காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதில் வழக்கு மூலம் இல்லை என்றும், எனவே பிராதை ரத்து செய்யக்கோரி 3ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

v. வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராது சங்கதிகளை நன்கு ஆராய்கையில், மேற்சொன்ன சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற இ.பி.நம்பர்.13/2004–ல் பிறப்பிக்கப்பட்ட 14.11.2011 தேதியிட்ட ஏலம் மற்றும்

23.01.2012 தேதியில் கொடுக்கப்பட்ட ஏலச்சான்றிதழ் ஆகியவற்றை பற்றி வாதிகளுக்கு எப்போது தெரியவந்தது என பிராதில் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்பது புலப்படுகிறது. மேலும், பிராது 5 வது பத்தியில் இம்மனுவில் கண்ட 4 ம் எதிர்மனுதாரர் 3 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண்.26/2001 தாக்கல் செய்து தீர்ப்பாணை பெற்று, தீர்ப்புத் தொகையை வசூல் செய்யக்கோரி இ.பி.நம்பர்.13/2004 நிறைவேற்று மனு தாக்கல் செய்தார் என்றும், அம்மனுவில் தபசில் சொத்துக்களை 14.11.2011 தேதியில் நீதிமன்ற ஏலத்தில் இம்மனுதாரர்/3 ம் பிரதிவாதிக்கு ஏலம் விடப்பட்டது என்றும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள். வாதிகள் தங்களுடைய பிராதில் பிராது தபசில் சொத்தை மோசடியாக ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு பிராது தபசில் சொத்தை ஏலத்திற்கு கொண்டுவர 4 ம் எதிர்மனுதாரருக்கு உரிமையில்லை என்றும், ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதும் புலப்படுகிறது. இருப்பினும், அசல் பிராதில் வாதிகள் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியுள்ள ஆவணமான மேற்சொன்ன இ.பி.நம்பர்.13/2004 நிறைவேற்றுதல் மனுவில் 14.11.2011 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஏலம் மற்றும் 23.01.2012 தேதியில் 3 ம் பிரதிவாதி/இம்மனுதாரருக்கு கொடுத்த ஏலச்சான்று குறித்து வாதிகளுக்கு எப்போது விபரம் தெரியவந்தது என்பதை வாதிகள் தங்களுடைய பிராதில் தெளிவாக குறிப்பிடவில்லை.

vi. அசல் பிராதில் வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரத்திற்கு காலவரையறை சட்டம் 1963 Article–58 ன் படி வழக்கு தாக்கல் செய்ய உரிமை ஏற்பட்ட மூன்று வருட காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யவேண்டுமென வரையறை செய்யப்பட்டுள்ளது. வாதிகள் அசல் பிராதில் பரிகாரம் கோரியுள்ள இ.பி.நம்பர்.13/2004 இன் ஓ.எஸ்.நம்பர்.26/2001–ல் 14.11.2011 தேதியில் இடப்பட்ட ஏலத்தையும் 23.01.2012 ல் இம்மனுதாரர்/3 ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட ஏலச் சான்றிதழையும் செல்லாது என விளம்புகை செய்யக்கோரி இந்த அசல் பிராதினை 04.11.2013 ம் தேதி தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் காலவரையறை சட்டம் Article 58–ன்படி உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே, அசல் பிராது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்புடையதல்ல என்ற இந்நீதிமன்றம் கருதுகிறது.

vii. மேலும், வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதி/3ம் எதிர்மனுதாரருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தில் பிராது தபசில் சொத்து வாதிகளுக்கு பாகமாக கிடைக்கப்பெற்றதாக வாதிகள் சங்கதிகளை முன்வைத்து பிராதை தாக்கல் செய்துள்ளதால், வாதிகள் எடுத்துரைத்துள்ள வாய்மொழி பாகம் குறித்து அசல் வழக்கின் சாட்சிய, சான்றாவணங்கள் விசாரணைக்கு பிறகு இறுதி தீர்ப்பிலேயே உறுதியான தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிகளுக்கு வழக்கு மூலம் இல்லை என இம்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் எடுத்துரைத்துள்ள போதும், வாதிகள் தங்களுடைய பிராதில் தபசில் சொத்து தங்களுக்கு வாய்மொழி பாகத்தில் கிடைக்கப்பெற்றது என்றும், தபசில் சொத்தை 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.26/2001 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புத் தொகையை வசூல் செய்யக்கோரி 4ம் எதிர்மனுதாரர் மோசடியாக தபசில் சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்துள்ளார் என்றும் சங்கதிகளை முன்வைத்துள்ளது புலப்படுகிறது. மேற்சொன்ன சங்கதிகளே இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலமாக வாதிகள் எடுத்துரைத்துள்ளார்கள் என்பதும் தெரியவருகிறது. எனவே, அசல் பிராதில் வழக்கு மூலம் எடுத்துரைக்கவில்லை என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்புடையதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர் இம்மனுவில் எடுத்துரைத்துள்ள ஆட்சேபனைகள் அனைத்தையும் மற்றும் வாதி எடுத்துரைத்துள்ள வழக்கு மூலத்தின் உண்மைத்தன்மையையும் அசல் வழக்கின் சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் மட்டுமே தீர்மானிக்க இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

viii. அசல் பிராதை ரத்து செய்ய பிராதில் எடுத்துரைத்துள்ள சங்கதிகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் என மாண்புமிகு உச்சநீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் பல்வேறு வழக்குகளில் தீர்வு கண்டுள்ளது. அதனை கருத்தில் கொண்டு வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராது சங்கதிகளை ஆராய்கையில், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் உரிய காலத்திற்குள் கோரப்பட்டுள்ளது என்றும், வழக்கிற்கான வழக்கு மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆகையால், அசல் பிராதை ரத்து செய்ய உரிமையியல்

நடைமுறை சட்டம் கட்டளை 7 பிரிவு 11–ல் வரையறை செய்துள்ள காரணங்கள் ஏதும் இவ்வழக்கின் பிராதிற்கு பொருந்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இவ்வழக்கின் அசல் பிராதை ரத்து செய்வதற்கான எவ்வித சட்டப்படியான காரணங்களும் இருந்துவரவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் பிராதின் சங்கதிகளையும், இம்மனுவில் எடுத்துரைத்துள்ள காரணங்களையும் கருத்தில் கொள்கையில் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே அசல் வழக்கின் தன்மைக்கும் சூழ்நிலைக்கும் உகந்ததாக அமையும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவாக,** மனுதாரரின் இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(Sd/-R.Narasimma Moorthy)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>**இருதரப்பு சாட்சிகள்**</u> :– – இல்லை –

<u>**இருதரப்பு சான்றாவணங்கள்**</u> :– – இல்லை –

(Sd/-R.Narasimma Moorthy)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.